Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 589/2025 PW-3**

Name : திரு.கலைமணி
Father / Husband name : மாரிமுத்து
Village : ரோசனை
Age : 52
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 25.02.2026

Accused present. Defence counsel present. HC 711 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரோசனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் பணி செய்கிறேன். கடந்த 18.12.2024 அன்று 19.20 மணிக்கு நான் ஒலக்கூர் காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது அ.சா.1 ஜெயக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய மனு ரசீது எண் 815/2024 ஐ பார்வையிட்டு அதன் அடிப்படையில் 22.12.2024 அன்று 18.30 மணிக்கு நிலையக்குற்ற எண் 399/2024, U/s. 296(b),118(1),351(3) BNS ன் படி வழக்கு பதிவு செய்து இதன் அசல் வாதியின் அசல் புகாருடன் இணைத்து கனம் நீதிமனத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசரித்தார்கள். **மனு ரசீது அ.சா.ஆ. 3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சிஎஸ்ஆர் 815/2024 ஐ 18.12.2024 அன்று பதிவு செய்துள்ளேன், அன்றையதினமே சம்பவம் நடைபெற்றதாக காவல் நிலையத்திற்கு தகவல் வந்தது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக

பணியிலிருந்தேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் சிஎஸ்ஆர் பதிவு செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் அதிகாரம் எனக்கு உள்ளது என்றால் சரிதான், அயல்பணிக்காரணமாக முதலில் புகார் பெற்றவுடன் சிஎஸ்ஆர் பதிவு செய்தேன், பின்னர் விசாரித்து வழக்கு பதிவு செய்தேன். 18.12.2024 அன்று அ.சா.1 புகார் கொடுக்கவில்லை, 22.12.2024 அன்று தான் காவல் நிலையத்தில் புகா்ா கொடுத்தார் என்றால் சரியல்ல. சிஎஸ்ஆர் தன்னிச்சையாக காவல் நிலையத்தில் தயார் செய்யக்கூடியவை என்றால் சரிதான். 4 நாட்கள் காலதாமதத்தை மறைப்பதற்காக சிஎஸ்ஆர் பதிவு செய்ததாக சொல்லப்படுகிறது என்றால் சரியல்ல. 02.01.2025 அன்று 10 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான காரணம் என்ன என்றால் நான் பதிவு செய்தவுடன் முதல் தகவல் அறிக்கையை நிலைய எழுத்தரிடம் கொடுத்துவிட்டேன். அ.சா.1 வழக்கறிஞர் என்றால் சரிதான். அவரின் அழுத்தத்தின்பேரில் காலதாமதமாக கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.